சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி [தன்னாட்சி] எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி [மகளிர்] வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-3
Part -3

Scanned by TapScanner

# பொள்ளாட்சி மாசாணி அம்மன் கோயில் வழிபாட்டு முறையும் வாழ்வியல் பயனும்


## ரேவதி

ஆய்வியல் நிறைஞர் மாணவி (முழுநேரம்), தமிழ் உயராய்வுத் துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், தமிழ்நாடு, இந்தியா.


கடவுளின் திருவடிகளை அடைவதற்காகவே நாம் பிறவி எடுத்துள்ளோம். ஆதலால் அத்திருவடிகளைச் சிந்தித்தலும் துதித்தலும் வணங்குதலுமே நம்முடைய முக்கியமான கடமை. உடம்பு நயப்படுவதற்கு உணவும், மனம் நயப்படுவதற்கு கல்வியும் தேவைப்படுவதைப் போல ஆன்மா நயப்படுவதற்கு கடவுள் வழிபாடு அவசியம் தேவையாகும். நாம் செய்யும் தொழிலுக்குக் கருவியாக இருப்பது உடம்பு. பொருட்களின் தன்மையை நாம் சரியாக அறிந்துகொள்ள கரவியாக இருப்பது மொழி. ஆதலால் உடம்பும், மனமும் ஆன்மாவின் கருவிகள். எனவே உடம்பை நயப்படுத்துவதற்கு வேண்டிய கல்வியை விடவும் மேலானது ஆன்மாவை நயப்படுத்துவதாகிய கடவள் வழிபாடு.

இத்தகைய கடவுள் வழிபாட்டின் மூலம் மனதைத் தூய்மையாக்கும் தன்மையை, சு. சிவபாத சுந்தரம்,

> "கடவுள் வழிபாடு நமது ஒழுக்கத்தைச் சீர்படுத்தக் கூடியது. தீய ஆசைகளேனும் தீய எண்ணங்களேனும் வரும்போது சிவ சிந்தனை செய்வதால் அச்சிந்தனை இவற்றைச் கருக்கி மீளவிடாமல் அழித்துவிடும். அது மனத்தைத் தூயதாக்கி இறைவன் எழுந்தருளியிருத்தற்கு தகுதிவாய்த இடமாகும்"

என்று குறிப்பிடுகின்றார்.

நாம் எதை அதிகமாக சிந்திக்கிறோமோ அதனிடத்தில் நமக்கு உறுதியான பற்று உண்டாவது போல கடவுளினிடத்தில் சிந்தனைச் செலுத்துபவன் கடவுளின் அன்புக்கு உரியவனாகிறான்.

இத்தகைய இறை வழிபாடு என்பது உலகில் பன்னெடுங்காலமாக நடைபெற்றுவரும் புனிதமான செயலாகும். இந்த இறை வழிபாட்டினை மேற்கொள்பவர்கள் மட்டுமல்லாது அவர்களுடைய சந்ததியினரும் குறைவுபடாத செல்வச்செழிப்போடு வாழ்வார்கள். இக்கருத்தையே தொல்காப்பியரும்,

> "வழிபடு தெய்வம் நிற்புறங்காப்பப்
> பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
> பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
> கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ"

என்று குறிப்பிடுகின்றார்.

### பொள்ளாச்சி ஓர் அறிமுகம்

இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பொள்ளாச்சிவ வட்டத்தின் நிர்வாகத் தலைமையிடமும் நகராட்சியும் ஆகும். பொள்ளாச்சியில் இருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் ஆனைமலையில் உள்ள மிக பிரம்மாண்டமான ஸ்ரீ மாசாணி அம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது.

### மாசாணி அம்மன் கோயில்

பெரும்பாலான நாட்டுப்பறத் தெய்வக் கோயில்கள் பீடங்களாகும். பீடங்களே கோயில்களாகக் கருதப்படுகின்றன. பீடங்களும் மண்ணாலும் கல்லாலும் அமைந்திருக்கும். விழாக்காலங்களில் மட்டும் பந்தல் போட்டுத் தோரணங்கள் கட்டுவர். சில தேவதைகளுக்கு மண்ணாலான மண்டபம் கட்டுவர். சில இடங்களில் கல்லாலான மண்டபம் கட்டியுள்ளனர். எந்தத்

தெய்வத்திற்காக கோயில் கட்டுகிறார்களோ அந்தத் தெய்வத்தின் பெயரால் கோயில் அமைக்கப்படுகின்றன. சில நாட்டுப்பறத் தெய்வங்களுக்கு ஆகம விதிப்படி கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திருக்கோயில் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். ஆணைமலையில் மயான பூமியில் மகாசக்தி தோன்றி ராமபிரானுக்கு அருள் வழங்கியிருக்கிறாள். இலங்கையை நோக்கிச் சென்றுகொண்டிரந்த சூழலில் ராமபிரான் ஆனைமலைக்கு வந்து சென்றதாக வழிவழியாகக் கூறப்பட்டுவரும் வாய்மொழிக் கதையும் கவனத்தில் கொள்ளத்தக்கதாக அமைகின்றது.

உப்பாற்றின் வடகரையில் இருந்த மயானத்தில் மண்ணையெடுத்து அதைக்கொண்டு சக்தியுருவம் கொண்ட ககுடாசுரன் என்ற அரக்கனை அம்மன் தன்னுடைய பாதங்களால் அழுத்திய நிலையில் இருப்பதான தோற்றத்தில் உருவாக்கி, ஆகம விதிகளின்படி சக்தி வழிபாடு செய்தள்ளார். ஆதிபராசக்தி அவர் முன்னிலையில் மயான ருத்திரியாகத் தோன்றி ஸ்ரீராம அவதாரத்தின் நோக்கம் நிறைவேறுவதற்குரிய வரமளித்து மறைந்துள்ளாள்.

இப்போது இங்கு அருள்பாளிக்கும் மாசாணியம்மன் மேற்கண்ட காலத்தில் ராமனின் திருக்கரங்களினால் உருவாகி வழிபாடு செய்யப்பட்ட மகிமை வாய்ந்ததொரு இறைவி ஆவாள்.

### பூசை முறைகளும் வாழிபாடுகளும்

மக்களின் வாழ்வில் சோர்வினைப் போக்கி, இன்பத்தைக் கொடுப்பது விழாவும், வழிபடும் முறையும், ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி உற்சாகத்துடன் கொண்டாடுவது விழா ஆகும்.

### விழாக்கள்

பண்டைய தமிழர் இலக்கியங்களில் விழாவினை விழவு, விழா, சாறு என்ற சொற்களால் அழைத்தனர். விழா என்ற சொல்லே நடைமுறையில் பின்பற்றப்படுகின்றது.

"விழா என்னும் திறந்த வாசல் வழியேதான் நம் நாட்டு மக்களை அறிந்துகொள்ள முடியும். அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாவாகும். விழாக்கள் மூலம் மக்களின் பண்பாடும், பழக்கவழக்கங்களும், நாகரிகமும் வெளிப்படுகின்றன"

என்று நாட்டுப்புற இயல் அறிஞர் சு. சக்திவேல் குறிப்பிடுகின்றார்.

### திருவிழா

அம்மனுக்குக் கூடுதல் சங்கு முறைகளும் விஷேச அலங்காரங்களும் திருவிழாவின்போது மேற்கொள்ளப்படுகின்றன. திருவிழாக்கள் ஆண்டிற்கு ஒருமுறை கொண்டாடப்படுவது வழக்கம்.

### திருவிழாக்களின் வகைகள்

திருவிழாக்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. கோயில் விழாக்கள்
2. வருடாந்திர விழாக்கள் (அ) பொது விழாக்கள்

### 1. கோயில் விழாக்கள்

கோயிலில் நடைபெறும் விழாக்கள் கோயில் விழாக்கள் எனப்படும். கோயிலில் பொங்கல் வைத்து, தேர் இழுத்தல். அங்கப் பிரதட்சணம் செய்தல் பொன்றவை கோயில் விழாக்கள் ஆகும் மேலும் இது அவ்வூர் மக்களால் மட்டுமே கொண்டாடப்படும்.

### 2. வருடாந்திர விழாக்கள்

பொதுவான விழாக்கள் உலக மக்கள் அனைவரும் சேர்ந்துக் கொண்டாடப்படுவது ஆகும். தைப் பொங்கல், தீபாவளி, சரஸ்வதி பூசை, ஆய்த பூசை, தை பூசம், பங்குனி உத்திரம், கார்த்திகை தீபம், ஆடிப் பெருக்கு போன்றவையாகும்.



Scanned by TapScanner

### பூசை

பூசை என்பது இறைவனை மலர்களால் அர்ச்சனை செய்து வழிபடுவதாகும். ஆலயத்தில் நடைபெறும் பூசைகள் நித்யம், நைமித்திகம் காமியம் எனப்படும்.

நித்யம் என்பது நாள் பூசையினையும் நைமித்திகம் என்பது விழா பூசையினையும் காமியம் என்பது கேள்விப் பூசையினையும் குறிக்கும்.

> "பூசையில் பயன்படுத்தப்படும் அபிஷேகப் பொருட்கள் படைத்தல் தொழிலையும், பலியிடுதல், அழித்தல் தொழிலையும் உணர்த்துகின்றது"

என்று இராமகிருஷ்ணன் குறிப்பிடுகின்றார்.

### பஞ்ச பூத வழிபாடு

அம்மன் கோயிலில் பஞ்சபூத வழிபாடு நடைபெறுகிறது. சந்தனம் இடுதல், பஞ்ச வழிபாடு, தீப தூபம் காட்டுதல், கற்பூர ஆராதனை, நைவேத்யம் ஆகியவற்றைக் கொண்டு அபிசேஷகம் செய்வதற்குப் பஞ்ச பூத வழிபாடு என்று பெயர்.

### மாதாந்திர வழிபாடு

மாதாந்திர வழிபாட்டைச் சிறப்பு வழிபாடு என்று கூறுவர். இங்கு ஒவ்வொரு மாதமும் சிறப்பு வழிபாடு நடைபெறுகின்றன. மக்கள் பெரும்பாலும் பங்குனி மாதத்தில்தான் அம்மனை வழிபட்டு அருள் பெறுகிறார்கள்.

### அம்மனை வழிபட்டால் ஏற்படும் பயன்கள்

அம்மனை காலையில் வழிபட்டால் வினைகள் நீங்கும். மதியம் வழிபட்டால் துயரம் நீங்கும். தினம்தினம் மாலையில் வழிபட்டால் ஏழு பிறப்பின்கண் வந்த வினைகள் நீங்கும். செல்வம் பெருகும், கண்பார்வை அற்றவர்களுக்கு மீண்டும் கண் பார்வை கிடைக்கும். பில்லி சூனிய மாயைகளால் ஏற்பட்ட பிணிகளை நிக்கி அம்மன் காப்பாற்றுவார்.

வஞ்சிக்கப்பட்டவர்களும், ஏமாற்றங்களுக்கு ஆளானவர்களும் மன வேதனையோடு வந்து அம்மனிடம் முறையிட்டு கண்ணீர் மல்க மிளகாய் அரைத்து பூசினால் குற்றவாளிகளுக்கு தக்க தண்டனை வழங்குவதோடு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியும் வழங்குகிறாள். பொள்ளாச்சி ஆனைமலையில் குடியிருக்கும் மாசானியம்மன்.

தைமாதம் நடைபெறும் குண்டம் திருவிழா மிகவும் சக்தி வாய்ந்தது. இதில் குழந்தை இல்லாதவர்கள், உடல் சார்ந்த பிரச்சனையில் இருந்து தீர்வு பெற்றவர்கள், இந்தக் குண்டத்தில் இறங்கி தன் நேர்த்திக் கடனைச் செலுத்துவர். இதில் பதினான்காவது நாள் இரவு மயான பூசை நடைபெறும். கடைசி நாளன்று மாசாணி அம்மன் தங்கத் தேரில் பவனிவருவார்.

### வழிபாட்டு நன்மைகள்

அம்மனுடைய அருளைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் இந்த வழிபாடு தன் பொருட்டு செய்யும் தனிமனித வழிபாடு, பிறர் பொருட்டுச் செய்யும் கூட்டு வழிபாடு என்ற இரண்டு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது. எப்படி என்றால் இடக்கை மணியடிக்க, வலக்கை மலர் தூவுகிறது. வாய் மந்திரங்களைக் கூற உள்ளம் இறைவனுடன் ஒன்றி நிற்கிறது.

இதே போன்று பிறர் பொருட்டுச் செய்யும் கூட்டு வழிபாட்டிலும் கூட்டுணர்ச்சி உண்டாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அம்மனை வழிபடுவதனால் தனிமனித ஒருமைப்பாடும் மக்கள் ஒருமைப்பாடும் எற்படுவதைப்போல் இயற்கை ஒருமைப்பாடும் உண்டாகின்றது என்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

மத்தளத்தைச் சூடு படுத்துவதனால் நெருப்புடனும், சங்கு நீரிலிருந்து எடுப்பதனால் நிருடனும், மணி உலோகத்திலும் (நிலத்திலிருந்து எடுக்கப்படுவது) குழல் காற்றுடன் தொடர்பு கொள்வதாலும், ஓதும் மந்திரம் அண்ட



Scanned by TapScanner

வெளியெங்கும் கேட்பதாலும் பஞ்ச பூதங்களும் அம்மன் வழிபாட்டால் தூய்மை அடைவதுடன் ஒற்றுமையும் பயனும் அடைகின்றது.

### வழிபடும் மக்கள்

ஒரு கோயிலை வணங்கும் முறையில் குலம், இனம் காணப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட கோயிலைக் கும்பிடுபவர்கள் எல்லாம் பங்காளிகளாக இருப்பர். அக்கோயிலைக் கும்பிடுபவர்களுக்குள் திருமண உறவுகள் நடைபெறுவதில்லை. வேறு கோயிலை வணங்குபவர்களோடுதான் திருமண உறவுகள் வைத்துக் கொள்வர். கொங்கு வேளாளக் கவண்டர்கள் இம்முறை தவறாமல் கடைபிடித்துவருகின்றனர். கோயிலை வைத்துத்தான் அவர்களுடைய உறவுமுறை பிரிக்கப்படுகின்றது.

### முடிவுரை

நம்பிக்கைகள் மற்றும் சமயம் சார்ந்த பக்தி, வழிபாடு, வழிபாட்டினால் உண்டாகும் ஒருமைப்பாடு, திருவிழாக்கள், பஞ்ச பூத வழிபாடுகள், அம்மனின் தல வரலாறு, தல இரப்பிடம், தலச் சிறப்பு, தலப் பெருமை பற்றி இந்த கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

### சான்றெண் விளக்கம்

1. ச.வே. சுப்பிரமணியன் - சங்க இலக்கியம் - ப- 20
2. சு. சக்திவேல் - நாட்டுப்புறவியல் - ப – 58

### துணைநூற்பட்டியல்

1. ச. வே. சுப்பிரமணியன் - அகநானூறு, மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை – பதிப்பு – 2010
2. சு. சக்திவேல் - நாட்டுப்புற இயல், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரி முனை, சென்னை – 600108.

௸



Scanned by TapScanner